| | |
|---|---|
| அனுப்புநர்<br>திரு சித.பெரியகருப்பன்,<br>மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் (கூபொ) நேதாஜி விளையாட்டரங்கம், வேலூர்–632 001. | பெறுநர்<br>மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்,<br>வேலூர். |

ந.க.எண்.135/2022, நாள். 06.09.2022

3896

மதிப்பிற்குரிய ஐயா/அம்மையீர்,

பொருள்: விளையாட்டு – மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்புற கொண்டாடும் வகையில் 2022–2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா பிறந்த தின விரைவு மிதிவண்டி போட்டிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வேலூர் மாவட்டப் பிரிவின் சார்பாக 15.09.2022 அன்று நடத்துவது – நடுவர்களுக்குப் பணி ஒதுக்கீடு செய்து நிகழ்ச்சியினை சிறப்பித்துத் தர வேண்டுதல் – சார்பாக.

பார்வை: தலைமைச் செயல் அலுவலர்/உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை அவர்களின் செ.மு.ஆணை எண்.7246/EM–3 / 2022, நாள் 25.08.2022.

=====

பார்வையில் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக 2022–2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா பிறந்த தின விரைவு மிதிவண்டி போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வேலூர் மாவட்டப் பிரிவின் சார்பாக இவ்வாண்டும், 15.09.2022 அன்று காலை சரியாக 6.30 மணிக்கு நடத்தப்பட உள்ளது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போட்டிகளில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளைச் சேர்ந்த 13 வயது முதல் 17 வயது வரையிலான மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

காட்பாடி அருகேயுள்ள சிருஷ்டி மேல்நிலைப்பள்ளி அமைந்துள்ள பிரம்மபுரம் என்ற இடத்திலிருந்து துவங்கப்பட்டு திரும்பி வரும் வகையில் நடத்தப்பட உள்ள இப்போட்டிகளுக்கு பின்வரும் உடற்கல்வி ஆசிரியப் பெருமக்களுக்கு நடுவர்பணி ஒதுக்கீடு செய்து தங்கள் அலுவலக இணையதள (CEO Website) வழியாகத் தகவல் தெரிவித்து நிகழ்ச்சியினை சிறப்பித்துத் தருமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்:–

| வ. எண். | உடற்கல்வி இயக்குநர்/ ஆசிரியர்பெயர் தி/ள் | பணிபுரியும் பள்ளி |
|---|---|---|
| 1. | அ.ஜான்சன் | அரசுமேல்நிலைப்பள்ளி, கணியம்பாடி |
| 2. | வி.இளங்கோவன் | அரசுஆண்கள் மேல்நிலைப்பள்ளி, லத்தேரி |
| 3. | எஸ்.ராஜா | அரசுஉயர்நிலைப்பள்ளி, தாதிரெட்டிப்பள்ளி |
| 4. | ஆர்.சந்திரசேகரன் | ந.கி.மு. மேல்நிலைப்பள்ளி, வேலூர் |
| 5. | சி.ஜெகந்நாதன் | அரசுமேல்நிலைப்பள்ளி, சேர்க்காடு |
| 6. | புவனா | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, காட்பாடி |
| 7. | வி.பல்லவன் | கே.ஏ.கே.எம். மேல்நிலைப்பள்ளி, வேலூர் |
| 8. | க.சோமலிங்கம் | அரசு முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி, வேலூர் |
| 9. | கே.பாபு | அரசுமேல்நிலைப்பள்ளி, வஞ்சூர் |
| 10. | ச.பாமாகுமாரி | அரசுமேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி |

| | | |
|---|---|---|
| 11. | எம்.ஜெயசீலன் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, காட்பாடி. |
| 12. | ஆர்.விஜயகுமார் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவலம். |
| 13. | வி.கிருஷ்ணமூர்த்தி | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஒடுக்கத்தூர். |
| 14. | ஜி.மகேஷ்குமார் | அரசு மேல்நிலைப்பள்ளி, கார்ணாம்பட்டு. |
| 15. | முரசொலி | அரசு மேல்நிலைப்பள்ளி, கொட்டமிட்டா. |

மேற்படி அட்டவணையில் கண்டுள்ள நடுவர் பெருமக்கள் போட்டி நடைபெறும் இடத்திற்கு 15.09.2022 அன்று காலை சரியாக 6.00 மணிக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரைச் சந்திக்கும் வகையில் ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர் (கூபொ),
வேலூர் மாவட்டப் பிரிவு.

நகல் – மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அவர்கள், வேலூர்.